DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 470 / 2023

Deposition of PW1- **திரு. இளங்கோ** (Cross)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.06.2025.

எதிரி ஆஜர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.) நான் காவல் துறையில் சார்பு ஆய்வாளராக இருந்து 31.08.2014 ம் தேதி ஓய்வு பெற்றேன். நானும் எதிரியும் ஒன்றாக படித்தவர் கிடையாது என்றால் சரிதான். நானும் எதிரியும் வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது , அவரது குடும்ப விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு நான் சென்றுள்ளேன். அவரது வீடு வடுகபட்டி, குரவர் தெரு, வ.உ.சி நகரில் அவரது வீடு உள்ளது. எதிரியிடம் செல்போன் மூலம் பேசும் பழக்கம் எனக்கு கிடையாது.

2)வழக்கமாக தீபாவளி, பொங்கலை நாங்கள் குடும்பத்துடன் கொண்டாடுவோம். எதிரி எனது வீட்டிற்கு தை பொங்கல் சமயம் வந்து செல்வார் என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் எதிரி என் வீட்டிற்கு தை பொங்கல் சமயம் வந்துள்ளாரா என்றால் எனக்கு நினைவில் இல்லை. தை பொங்கல் அன்று என் வீட்டிற்கு எதிரி வந்தது கிடையாது என்று சொன்னால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. எனது குடும்பத்தாரை எதிரி வந்து என் வீட்டில் சந்தித்தது கிடையாது என்றால் சரிதான். 2023 ம் வருடம் தை பொங்கல் என் வீட்டில் வைத்து தான் கொண்டாடினோம்.

3.) அன்றைய தினம் என் குடும்பத்தார் வீட்டில் இருந்தார்களா என்றால் எனக்கு நினைவில் இல்லை. எதிரி என்னிடம் தைப் பொங்கல் அன்று வந்து பணம் வாங்கினார் என்றால் தைப் பொங்கல் அன்று கிடையாது அதற்கு பின்னால் ஒரு நாள் வந்து வாங்கினார். 15.01.2023 என்பது தைப்பொங்கல் நாள் என்றால் சரியாக நினைவில் இல்லை. நான் எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 15.01.2023 ம் தேதி பணம் வாங்கினார். நான் சொல்வது போல் 15.01.2023 ம் தேதி தைப் பொங்கல் என்பதால் அன்றைய தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

4.) அன்றைய தேதியில் எனது மனைவி, எனது குழந்தைகள் யாரும் இல்லை என் நண்பர் இருந்தார் அவர் பெயர் நாராயணசாமி. எதிரிக்கு நான்

அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் எதிரி என்னிடம் பணம் வாங்கிய போது என் நண்பர் நாராயணசாமி என்பவர் உடனிருந்தார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் சாட்சி பட்டியலில் அவரது பெயரை சேர்த்துள்ளேன். நாராயணசாமிக்கும் எதிரிக்கும் எந்த பழக்கவழக்கமும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் நாராயணசாமிக்கும் சுமார் 10 ஆண்டுகளாக பழக்கம்.

5.) உண்மையாகவே நாராயணசாமி என்பவர் எதிரிக்கு நான் பணம் கொடுக்கும் போது உடனிருந்திருந்தால் அந்த விபரத்தை நான் புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருப்பேன் என்றாலும் அவர் இல்லாததால் தான் சொல்லவில்லை என்றும் தற்போது பின் யோசனையுடன் நாராயணசாமி உடனிருந்தார் என்று குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எத்தனை வருடம் பழக்கம், எதன் அடிப்படையில் பழக்கமானார், யார் மூலம் அவர் அறிமுகமானார் என்ற விபரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

6.) எதிரி எதற்காக என்னிடம் கடன் வாங்கினார், அந்த தொகையை எதற்காக பயன்படுத்தினார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் தன்னுடைய குடும்ப செலவிற்காகவும், வீடு கட்டுவதற்காகவும் வாங்கினார்.நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 4 வது பாராவில் எதிரி என்னிடம் 5 லட்சம் கடன் தேவைப்படுவதாகவும் அந்த கடனை 3 மாத காலத்திற்குள் திருப்பி செலுத்திவிடுவதாக எதிரி கேட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா கடன் ரூ.5 லட்சத்திற்கு அவர் திருப்பி கொடுப்பதாக சொன்ன 3 மாதத்திற்கு என்ன வட்டி பேசிக் கொண்டோம் என்றால் ரூ.100 க்கு ரூ.2 வட்டி வீதம் பேசிக் கொண்டோம். எதிரி எனக்கு வட்டி கொடுக்கவில்லை.

7.) நான் எதிரியிடம் வட்டி பணத்தை திரும்பி கேட்டேனா என்றால் நான் பணத்தை கொடுக்கும் போது வட்டி தொகை கேட்டேன் அப்போது அவர் பணத்தை திரும்ப கொடுக்கும் போது வட்டி சேர்த்து கொடுக்கிறேன் என்று கூறினார். எனது புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எதிரிக்கு வட்டி கொடுத்து வட்டி தொகை திருப்பி செலுத்தவில்லை என்று நான் சொல்லவில்லை. எதிரிக்கு நான் கொடுத்த ரூ.5 லட்சம் பணத்திற்கு நான் ஆவணங்கள் ஏதேனும் அவரிடம் பெற்றுக் கொண்டேனா என்றால் அவர் ரூ.5 லட்சம் என்று எழுதி செக் ஒன்று எனக்கு கொடுத்தார் அதை தவிர வேறு ஆவணம் எதுவும் பெறவில்லை. எதிரி என் நண்பர் என்பதால் நான் காசோலை மட்டும் தான் பெற்றுக் கொண்டேன் வேறு ஆவணம் எதுவும் பெறவில்லை. இதற்கு முன்பு எதிரிக்கும் எனக்கும் வேறு கொடுக்கல் வாங்கல் உண்டா என்றால் உண்டு கை செலவிற்காக மட்டும் சிறிய தொகையாக ரூ.50, 100, 200 என வாங்கியுள்ளார்.

8.) எதிரி அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிவதால் என்னிடம் அவர் ரூ-50,100 வாங்கும் பொருளாதார நிலையில் அவர் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் வாங்கிய தேதியில் பூர்த்தி செய்த காசோலையை கொண்டுவந்தாரா என்றால் ரூ.5 லட்சம் என்ற தொகையையும், கையொப்பத்தையும் இட்டு என்னிடம் கொடுத்தார். எதிரி என்னிடம் கொடுத்த தாவா காசோலையில் எனது பெயர், தேதி பூர்த்தி செய்யப்படாமல் கொடுத்தார் என்றால் சரிதான். எனது பெயர், தேதி தாவா காசோலையில் பூர்த்தி செய்யவில்லை என்பதற்கு எந்த காரணமும் இல்லை என்று சொன்னால் நான் சொல்லும் தேதியில் நீங்கள் உங்கள் பெயரையும், தேதியையும் பூர்த்தி செய்து வங்கியில் பெற்றுக் கொள்ளுமாறு எதிரி சொன்னார்.

9.) அவ்வாறு எதிரி என்னுடைய பெயரை தாவா காசோலையில் பூர்த்தி செய்து கலெக்ஷன் போடுமாறு சொன்னதாக எனது புகார் , நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் என் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை. உண்மையாக எதிரி என்னிடம் காசோலையை கொடுத்திருந்தால் அவர் தாவா காசோலையில் என்னுடைய பெயரையும், தேதியையும் குறிப்பிட்டு கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. பூர்த்தி செய்யப்படாத காசோலை என்னிடம் 3 மாதம் இருந்தது. நான் காசோலையை வங்கியில் செலுத்தும் 10 நாட்களுக்கு முன்பு எதிரியை பார்த்தேன். தாவா காசோலை தேதி, பெயர் விபரங்களை நான் வங்கியில் வைத்து தான் பூர்த்தி செய்தேன். தாவா காசோலை தேதி, பெயர் விபரங்களை நான் பூர்த்தி செய்யவில்லை என்றும், ராஜாமணி என்பவர் தான் பூர்த்தி செய்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரியிடம் எந்த தேதியில், எங்கு வைத்து யார் முன்னிலையில் தாவா காசோலை தொகையை கேட்டேன் என்ற விபரத்தை எனது புகார் , நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.
( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.06.27 18:17:54 +0530

Judicial Magistrate,
Andipatti.